25th March 1964]

திரு. கரு. சீமைச்சாமி : மதுரையில் சர்வகலாசாலை அமைக்கப் பட இருக்கிறது. அங்கு சட்டக் கல்லூரி இல்லையே, அது அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல்கலைக் கழகம் அமைக்கப் பட்ட பிறகு சென்னையில் இருக்கிற சட்டக் கல்லூரி போதாது என்றால் அதற்குப் பிறகு அது கவனிக்கவேண்டிய விஷயம்.

திரு. வை. சங்கரன் : மற்ற இடங்களை விட இந்த இடத்திலே என்னென்ன அனுகூலங்கள் இருக்கின்றன என்று இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது ? நிலம் ஆர்ஜிதம் செய்வதற்குள்ளாக இதர விஷயங்களைப்பற்றி, அதாவது எப்படி கட்டடம் அமைப்பது என்பதைப்பற்றியெல்லாம் தீர்மானம் செய்யலாமே. அந்த முறையில் கால தாமதம் ஏற்படாமல் தீர்மானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு இருந்தால் நலம் என்று கருதப்பட்டது. அந்த வசதி மதுரையில் இருக்கிறது. கனம் உறுப்பினர் வேறு ஏதாவது யோசனை சொன்னால் அதையும் அரசாங்கம் கவனிக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இப்படி யுனிவர்ஸிடிக்கு ஆயிரம் ஏக்கர் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கிற காரணத்தினால் பக்கத்து நிலங்கள் அத்தனையிலும் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று தொழில் ஆரம்பிக்கப் போவதாக போர்டு போட்டு அனுமதி கோரியிருக்கிறார்கள். இருக்கிற விவசாய நிலங்களைக் குறைக் காமல் இருக்க அரசாங்கம் உத்திரவு இடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு அவசியத் தேவையை யொட்டி ஆர்ஜிதம் செய்யும்போது, இப்படியெல்லாம் இடையூறு வருவது உண்டு. இதையெல்லாம் கவனித்து விவசாயிகளுக்கு அதிகமாக பாதகம் ஏற்படாதவாறு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. பொன்னையன் : கோவையில் எல்லாக் கல்லூரிகளும் நிறைய இருக்கின்றன. அதோடு மெடிக்கல் காலேஜும் வரப் போகிறது. ஆகையால் அங்கு ஒரு சர்வகலாசாலை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அரசாங்கத்தின் உத்தேசம் மதுரையில் அமைப்பதுதான்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, மதுரை சர்வ கலாசாலை அதிகார வரம்புக்கு உட்பட்டு எத்தனை கல்லூரிகள் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அது பின்னால் பார்க்க வேண்டிய விஷயம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தெந்த மாவட்டங்கள் இந்த பல்கலைக் கழகத்திற்கு உட்படும் என்பது அரசாங்கம் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

[25th March 1964

புலவர் கா. கோவிந்தன் : மதுரையில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயரிடும் கட்டம் இன்னும் வரவில்லை.

Agricultural loan

* 392 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount of agricultural loan sanctioned to Sri C. Purushothama Reddiar, M.L.A., of Pondicherry on the security of lands owned by him in some villages in Cuddalore taluk of South Arcot district about nine years ago;

(*b*) the amount of principal and interest recovered so far; and

(*c*) the amount of arrears due from him as on 1st December 1963?

The Hon. Sri P. KAKKAN : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

(அ), (இ) & (உ) : இது குறித்து சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வண்டிகளுக்கான வரி செலுத்தும் விதம்

* 393 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் இருப்பது போலவே வெளி மாவட்டங்களிலும் மோட்டார் உரிமையாளர்கள் செக் மூலமாக வரியினைச் செலுத்த ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஏற்பாட்டினை ஒரு தடவை பரிசீலனை செய்துவிட்டு விட்டோம். இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கம் உத்தேசிக்கிறது.

நியாய விலைக் கடைகள்

* 394 கேள்வி—திரு. செ. மாதவன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கும் நியாய விலைக் கடைகளை மூடிவிடும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமென்றால் காரணமென்ன ?

---

a Printed as Appendix I on page 334 infra.